தனிப்பிரதி 1 அணு ஆண்டு சந்தா ரூ. 5. REGD. NO. M. 4455

# திராவிடநாடு

ஞாயிறு வெளியீடு.

ஆசிரியர்
C. N. அண்ணாதுரை M. A.,

"வீணரைப் பணிவது மக்களின் கடனா?
மேவும் உழைப்பினிலே ஏவுதல் கடனா?"
[கவி பாரதி தாசன்]

மலர் 1 | காஞ்சிபுரம் 9—8—42 சித்திரபானு—ஆடி 25—ஞாயிறு | இதழ் 23

# வார்தா முனிவர் யாகம் செய்தால்..........!

பரதன்.

"ஓகோ! தூக்கமா? பக்கத்திலே இவன் தேவியும் இருக்கிருள். தன்னை வெல்பவர் இல்லை என்ற மன நிம்மதியால், நன்ருக நித்திரை செய்கிருன். ஆ! நான் இவ்விதம் நிம்மதியாகத் தூங்கி எத்தனை நாட்களாகி விட்டன. படுக்கையில் புரண்டு புரண்டு நான் புலம்புகிறேன். இவனே நிம்மதியாகத் தூங்குகிருன். சற்று விழி, பிறகு, என்றென்றும் விழித்துக்கொள்ள முடியாத பெருந் தூக்கத்திலே உன்னைக்கொண்டு போய்ச் சேர்க்கிறேன்." என்று, முத்தநாதன், மனதிற்குள் கூறிக்கொண்டான்.

அவனெதிரிலே, மலரணைமீது மன்னன் மெய்ப்பொருள் நாயனுர் தன் தேவியுடன் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தான். வாயிற் காப்போரையும் மீறிக் கொண்டு உள்ளே நுழைந்த முத்தநாதன், மன்னன் துயில்வது கண்டு, மனதிலே பலப்பல எண்ணினுன். பிறகு மன்னனை எழுப்பி, தான் வந்தகாரியத்தை நிறை வேற்றிக்கொள்ளக் கருதினுன். முத்தநாதன், உரத்த சத்தத்துடன் "அரகர மகா தேவ!" என்று கூவினுன். மன்னன் விழித்துக் கொண்டான். "ஆகா! முகத்திலே என்ன பொலிவு! பக்தி ததும்பும் கண்கள்! நீறு பூசிய நெற்றி! உருத்திராக்கமாலை துலங்கும் கண்டம்! சிவ சொரூபமே, சிரம் தாழ்த்தினேன். உமது வரவு, எனது வினைகளை அறுத்தொழிக்குமென்றே நம்புகிறேன். அரனடியாரே எமக்கு ஆண்டவன். அடியேனை ஆட் கொள்க" என்று கூறி, கை கூப்பி நின்றுன் மன்னன்.

முத்தநாதன், சிவனடியார்போல, காவிபூண்டு, உருத்திராக்கமாலை தரித்து, கட்டுக்கட்டாக நீறு பூசி அங்கு வந்திருந்தான். திருக்கோயிலூரை ஆண்டு வந்தவனும், திக்கெட்டிலும் தன்புகழ் பரப்பியவனும், இதே முத்தநாதனெனும் சிற்றரசனைப் பன்முறை முறியடித்தவனுமாகிய மன்னன் மெய்ப்பொருள் நாயனுருக்கு, சிவனடியார்களிடம் விசேஷமான பக்தி உண்டு. எனவே, முத்தநாதன் சிவனடியார்போல் வேடம்பூண்டு சென்று, மெய்ப்பொருள் நாயனுரைக் கொல்லவே, அன்று அவ்வேடத்தில் அங்கு வந்தான். அவன் எண்ணியபடியே, மன்னனும், வேடத்தைக் கண்டு மயங்கி, முத்தநாதனைச் சிவனடியாரெனக் கொண்டு வணங்கிட, வஞ்சனை வெல்வது கண்டு முத்தநாதன் மகிழ்ந்து, புத்தகக் கவுளியைக் காட்டி, "மன்னு! நின்னிடம் தனித்திருந்து சில பேசி, மெய்ப்பொருள் உரைத்திட விழைகிறேன்" என்றுரைக்க, மன்னன், தேவியை அனுப்பிவிட்டு, தனித்திருந்து, "திருமந்திர மெதுவென்று கூறுக" என்று கேட்க, புத்தகக் கவுளியிலே மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து, மன்னனை முத்தநாதன் கொன்று, வஞ்சனைக்காரரை நம்பிடுபவர் உயிர் இழப்பர் என்ற மெய்ப்பொருளை நமக்கெல்லாம் உணர்த்தினுன்.

முத்தநாதர்கள் இன்றும் உள்ளனர்!!

அவர்கள் இன்றும், யாரைக்கெடுக்க வேண்டும், அழிக்க வேண்டும் என்று எண்ணுகின்றனரோ, அவர்கள் எந்த வேடத்தைக் கண்டால் சொக்குவரோ, அதேவேட மணிந்து வருகின்றனர். தேசபக்த வேடத்தில் வரும் வஞ்சனைக்காரரின் வலையிலே வீழ்வோர், விபரீதமான விளைவுகளுக்கு ஆளாகித் தவிப்பர் என்பது திண்ணம்.

*      *      *      *      *      *

நிருபர்:—காந்தியார் ஆரம்பிக்கப்போகும் இயக்கத்திலே நீங்கள் கலந்துகொள்ளப் போகிறீர்களா?

இராசகோபாலாச்சாரியார்:—தாங்கள் கலந்துகொள்வதாக உத்தேசமோ?

நிருபர்:—நான் காங்கிரஸ் காரனல்லவே!

ராஜ: —பிறகு, என்னை ஏன் கேட்கிறீர்கள்?

வார்தாவிலிருந்து திரும்பிய இராசகோபாலாச்சாரியாருக்கும் பத்திரிகை நிருபருக்கும் இத்தகைய பேச்சு நடந்ததாம். காங்கிரசல்லாத நீர் எப்படி, காந்தியார் துவக்கப்போகும் சத்யாக்கிரகப் போரிலே கலந்து கொள்ளப் போவதில்லையோ அதைப் போலவே, நானும், காங்கிரஸ் காரனல்ல. எனவே, நானும் அந்த இயக்கத்திலே கலந்து கொள்ளப் போவதில்லை, என்பதே ஆச்சாரியார் பேச்சின் கருத்து. காங்கிரஸ்காரர் என்றுள்ளவர்கள், எல்லோ

ரும் இந்தப் போரில் கலந்து கொள்வார்களா என்பதே சந்தேகம். சிறை புகவேண்டும் என்றதும், எத்தனையோ "தேச பக்தர்களுக்குத்" திடீர் காய்ச்சலும், குலைவலியும் வருவதுண்டு. குடும்பத்திலே தொல்லை, பாகப் பிரிவினையாகவில்லை, புதுக்கலியாணம் செய்துகொண்டு ஆண்டு ஒன்று கூடச்சரியாக முடியவில்லை, என்று ஏதேதோ கூறுவர், சிறை புகுவதிலிருந்து தப்பித்துக்கொள்ள. உள்ளே புகுந்ததும், ஆஸ்த்மா, அல்லது அபெண்டிசிடிஸ், குன்மம் அல்லது குமட்டல் என்ற ஏதாவதோர் வியாதி இருப்பதாகக் கூறி, சிறையிலிருந்து ஆஸ்பத்திரி, பிறகு அங்கிருந்து வீடு, வந்துசேரும் வித்தையைச் சிலர் செய்வர்.

காங்கிரஸ்காரர் அனைவருமே போகிறார்களோ இல்லையோ என்பதே சந்தேகமாக இருக்கும்போது காங்கிரசல்லாதவர்கள் இந்தப் போரிலே கலந்து கொள்வார்களா, மாட்டார்களா என்ற கேள்விக்கே இடமில்லை. கேட்கவேண்டிய கேள்வியும் அதுவல்ல.

நாட்டை எதிரிக்குக் காட்டிக்கொடுக்கும் கூட்டத்திலே நீர் சேருகிறீரா? என்பதே கேள்வி. மானமும் மதியும், நாணயமும் நற்குணமும் கொண்ட எவனும், எதிரிக்கு நாட்டைக் காட்டிக் கொடுப்பேன் என்று கூறமாட்டான்!

ஆனால், இந்த உபகண்டத்திலே, குறிப்பாகக், கங்கைக் கரைத் தீரத்திலே, காட்டிக் கொடுக்குங் கும்பல், (முத்த நாதர்கள்) பன்னெடு நாட்களாகவே வாசஞ் செய்து வருகிறது. கத்தி கேடயம் தாங்கத் தெரியாது அக்கூட்டத்துக்கு, காவி கமண்டலத்துடனே, முப்புரி தர்ப்பையுடனே காட்சிதரும் கபடக் கூட்டம், நெருக்கடியான நேரங்களிலே எதிரிகளுக்கு உள்வு கூறியும், உள் நாட்டிலே கலக மூட்டியும், படை வரிசைகளிலே பீதி கிளப்பியும் பாமரரிடையே பேதம் விளைவித்தும், நாட்டை நாசமாக்கி வந்தன. நவநந்தர்கள் கால முதற்கொண்டு இந்த நாச கால வேலையைச் செய்து வந்ததற்குச் சான்றுகள் பலப்பல உண்டு.

ஐரோப்பாவிலே, நாஜிப்படைகள், திடீர்திடீரென வெற்றிகள் பெற்றதற்கு இத்தகைய துரோகிகளின் செயலே முக்கியமான காரணமாக இருந்ததென்பதை உலகறியும். இத்தகைய காட்டிக்கொடுக்கும் கும்பல், ஒவ்வோரிடத்திலே ஒவ்வோர் முறையைக் கையாளும். நாட்டுமக்களுக்குள்ள இயற்கையான சுதந்திரதாகத்தை எடுத்துக்கூறி, அதையே சாக்காகக் கொண்டு, எதிரிக்கு இடமளிக்கும் இழிசெயல் இங்கு கையாளப்படும் முறையாக இருக்கிறது.

பிரிட்டிஷாரே வெளியே போய்விடுவீராக என்ற மந்திரத்தை உச்சாடனம் செய்து சத்யாக்கிரக ஓமத்தை மூட்டுகிறேன், அதற்கு சமித்தும் சருகும் நெய்யும் நிவேதனப் பொருளும் சேகரியுங்கள் என்று வார்தா முனிவர் கூறிவிட்டாராம். வந்துவிட்டது சுயராச்யம் என்று கருதிக்கொண்டு ஒருகூட்டம் இருக்கிறது. அந்தக்கூட்டத்தின் ஏமாளித்தனத்தை 'முதல்' எனக் கொண்டு தமது கடைசிச் சூதாட்டத்தை ஆடிப்பார்க்கப்போகிறாராம் காந்தியார். இவரது இந்தச் செயலை, வெளிநாடுகளிலே ஹிட்லருக்கு உடந்தையாக இருந்த உளவாளிகளின் செயலுடனும் பக்தியிலே பற்றுக்கொண்டிருந்த மெய்ப்பொருள் நாயனாரைக் கபடத்தால் கொன்ற முத்தநாதன் செயலுடனும் ஒப்பிட்டு நான்கூறுவது தக்க காரணத்தோடேயேதான், தெகிடுதத்தமல்ல. பிரிட்டிஷாரே வெளியே போ! என்று கூறுவது, ஜப்பானியரே உள்ளேவா! என்று அழைப்பதாக இருக்கமுடியுமே தவிர வேறென்னவாகஇருக்க முடியும்! காந்தீயர்களின் மனதிலே ஒருதப்பெண்ணம் உண்டாகிவிட்டது. அச்சுநாட்டுப் படைகளின் கை ஓங்கிவிட்டதாக அவை தீர்மானித்துவிட்டன. எனவே இந்தச் சமயத்திலே பிரிட்டிஷாரை வெளியே போ என்றுகூறும் கிளர்ச்சியைத் துவக்கினால், ஹிட்லரும் டோஜோவும் களிப்படைந்து உச்சிமோருவர் என்று கருதுகின்றனர். இது பித்துக்கொள்ளிப் போக்கின்றி மதியூகமாகாது. ஹிட்லரும், டோஜோவும் இந்தியாவுக்குள் நுழையவேண்டுமானால், பிரிட்டிஷ் படைபலத்தை எதிர்க்க வேண்டுமே என்று எண்ணியோசிக்கின்றன. இந்த நேரத்திலே, உள்நாட்டிலே குழப்பம் விளைந்தால் உள்ளேநுழைய இதுசரியான சந்தர்ப்பம் என்று எண்ணி அச்சுநாட்டுப் படைகள் குதூகலிக்கும். உள்ளே நுழைந்தால் எதிர்க்கப் படைஏது! படை இல்லாதபோது பூர்ணகும்ப மெடுத்துக்கொண்டு பூர்ணய்ய பரம்பரை, எதிர்கொண்டழைத்து வந்து "எமது மதத்தைப் பரிபாலித்து எம்மை இரட்சியும் பிரபோ!" என்று அஞ்சலிசெய்து கெஞ்சும். மதத்தை ரட்சிக்க அச்சுநாடு தயங்காது! ஏனெனில் அதற்குத் தெரியும், இந்நாட்டுப் பேதம் பிளவு, ஜாதித் தொல்லை சாத்திரச்சண்டை, மூடத்தனம் முதலியன மதப்பிரசாதமே என்பது. எனவே இத்தகைய மதத்திலேயே இந்த மக்கள் மூழ்கிக்கிடந்தால் தான், அடிமைகளாக்கிச் சவாரிசெய்ய சுலபமாக இருக்குமென்று தீர்மானித்துவிடும்! பார்ப்பனருக்கும் இது பரமதிருப்தி! யாரோ ஆளட்டும் நமக்கென்ன! நமது ஆட்சியிலே குறுக்கிடாதவரையிலே இலாபம் நமக்கு என்று எண்ணிவிடும். திதிஉண்டு, கோயில் பூஜை உண்டு, வேதபாராயணம் உண்டு, விதவிதமான பிரசாத வகையருக்கள் உண்டு பூசச்சந்தனமும் சூடிக்கொள்ளப் பூவுமுண்டு, அடிமைவேலைசெய்ய சூத்திரருண்டு, என்ற இந்த 'அரசு' நிலைத்துவிட்டால் மற்றவற்றைப்பற்றிப் பார்ப்பனர்களுக்கு என்னகவலை? யார் ஆண்டாலென்ன? எத்தகைய ஆட்சியாக இருந்தால் தான் என்ன? என்றே எண்ணுவர். உண்மையிலேயே தோழர்களே, இதுவரை இந்த உபகண்டத்திலே எத்தனைவிதமான ஆட்சி ஏற்பட்டிருந்தபோதிலும், பார்ப்பனர்களின் ஆதிக்கத்திலே குறுக்கிடவில்லையென்றால் அந்த ஆட்சியைப் பார்ப்பனர் குறைகூறுவதில்லை. தங்கள் ஆதிக்கத்துக்குக் குறைவு வருகிறதெனக் கண்டுகொண்டால் போதும், உடனே சதிசெய்வர், எதிரியிடம் நாட்டைக் காட்டிக்கொடுக்க முனைவர். இது தொன்று தொட்டு நடந்துவரும் வழக்கம். 'இந்திரனே! எமக்கு நல்ல மழைகிடைக்கும்படி செய் எமது எதிரிகளான தஸ்யூக்களை நாசம்செய்" என்று ரிக் வேதகாலத்திலே கேட்ட ஆரியர்கள், இன்றும் அதே நோக்கத்துடனேயே வேலைசெய்து வருகின்றனர், காட்டிக்கொடுத்திருக்கின்றனர். ஒவ்வோர் காலத்திலே ஒவ்வோர் விதமான முறையைக் கையாண்டுள்ளனர்.

நார்வே நாட்டைக் காட்டிக்கொடுத்த குவிஸ்லிங்கின் முறைக்கும், நாம்வாழும் இந்த உபகண்டத்தைக் காட்டிக் கொடுக்கக் கிளம்பியுள்ள குவிஸ்லிங் கூட்டத்தின் முறைக்கும் வித்தியாசமுண்டு. ஆனால் இருவரின் செயலும், துரோகத்தின்மீதே கட்டப்பட்டிருக்கிறது. இங்குள்ள குவிஸ்லிங் நாட்டுக்கு சுயராச்யம் கேட்கும் வேடத்தைப் புனைந்துகொண்டு நாற்புறமும் ஆபத்துச் சூழ்ந்துள்ள இந்த வேளையிலே நாட்டிலே குழப்பத்தை உண்டாக்கத்துணிந்து இந்தச்செயலை ஆதரிக்குமாறு மக்களிடமும் முறையிடக்காண்கிறோம். நாட்டுக்கு விடுதலை யார்வேண்டாமென்றார்கள்? யார் வேண்டாமென்று உரைப்பார்கள்? யார்தர மறுக்கிறார்கள்? தர மறுக்க யாருக்கு உரிமை உண்டு? விடுதலை என்பது பரிசல்ல! கேட்டுப்பெற! அதுஒருநிலை, நம்மைப் பக்குவப் படுத்திக்கொண்டால் அந்த நிலையை அடைதல் முடியும்! பக்குவமடையா முன்போ, காலம் கனியா முன்னமேயோ, அதை அடையத் துடியாய்த் துடித்தாலும், ஆட்டமாடினாலும், ஆப்பசைத்த மந்தி அடைந்ததுபோன்ற அவதியே அடைய வேண்டி நேரிடும். இதனை உணரமறுப்போரின், உள்ளத்திலே

9ம் பக்கம் பார்க்க.

தொடர் கதை

# * கலிங்க ராணி *

———[ சௌமியன். ]———

[முன்பு: குலோத்துங்க சோழனின் குதிரைப்படைத் தலைவன் வீரமணி, அரண்மனைத்தோழி நடனராணியைக் காதலிக்கிறான். மன்னனுடன் காடுசென்று வேட்டையாடுகையில், வீரமணியைக் கச்சிக்கு அனுப்புகிறான் காவலன். நடனராணி தோட்டத்தில் விளையாடிவிட்டு மன்னன் மகளுடன் அரண்மனை போகிறான். பிறகு..............]

அம்மங்கையும், நடனராணியும் அரண்மனைக்குள் சென்றனர். குலோத்துங்க சோழனின் தேவி, தியாகவல்லி அவர்களை எதிர்கொண்டழைத்து, "மங்கா! மன்னர், காஞ்சிபுரம் போகிறாராம். என்னையும் வரச் சொன்னார். காலையிலே புறப்படுகிறேன். நீயும் வருகிறாயோ" என்றுகேட்க, "நான் வரவில்லை அம்மா" என்று அம்மங்கை கூறிவிட்டாள். செய்தி கொண்டு வந்த மருதன், அம்மங்கையை வணங்கிவிட்டு, "தேவி! இதோ இந்தப் பஞ்சவர்ணக்கிளியை வீரமணி தங்களிடம் தரச்சொன்னார்" என்றுகூறிக் கிளியைத்தர, அம்மங்கை ஆச்சரியப்பட்டு, நடனராணியை நோக்கியபடி, "கேட்டாயோ நடனம், வீரமணி கிளியை எனக்குத் தரச்சொன்னானாமே" என்றுகூறிட, நடனம், "நாட்டிலேயும் காட்டிலேயும் கிடைக்கும் எந்த உயர்தரப்பொருளும் தங்களுக்குக் குடிபடைகள் தரக்கடமைப் பட்டிருக்கிறார்கள்' என்று கூறினாள். ஆனால், நடனராணிக்குக்கொஞ்சம் மனக்கஷ்டந்தான். இதைத் தெரிந்துகொண்டாள் ஆரியப்பெண் கங்காபாலா! ஆகவே, இருவரிடையேயும் விரோதத்தை மூட்டிவிட வழிகிடைத்துவிட்டது என்று எண்ணிக்களித்தாள். நடனராணி இருக்கும்வரை, அரண்மனையிலே தனக்குச்சரியான செல்வாக்குக்கிடைக்காது என்று கங்காபாலா கருதினாள். அம்மங்கையிடம் தனக்குச்செல்வாக்கு ஏற்பட்டுவிட்டால், ஆரியகுலத்துக்கே சோழமண்டலத்திலே உத்யோகம் உயர்ஸ்தானம் கிடைக்கும்படி செய்ய முடியுமல்லவா! பஞ்சவர்ணக்கிளியுடன், அம்மங்கை படுக்கையறைசென்று. தங்கக்கூண்டிலே கிளியைவிட்டு, வேடிக்கைபார்த்துக் கொண்டிருக்கையில், நடனராணியிடம், பாலா, "நடனம்! என்னடி பரிசு வேறுயாருக்கோ விழுந்துவிட்டது போலிருக்கிறதே. உனக்கல்லவா, கிளியை அவர் அனுப்பி இருக்கவேண்டும். எதற்காக அரசகுமாரிக்கு அனுப்பினார்?" என்றுகேட்டாள். அவள்பேச்சு, கோபத்தையும் ரோஷத்தையும் நடனத்தினிடம் மூட்டவேண்டுமென்று இருந்தது. இந்தச் சூதை ஒருவாறுதெரிந்துகொண்ட நடனராணி, பாலாவின் நாவை அடக்கினாள்.

மந்தச்செவியன் மருதன் செய்த இந்தச்சங்கடத்தை எதுமறியாத வீரமணி, நடனத்தை எண்ணியபடி கச்சிசென்று, மன்னன்வருகிறார், என்ற செய்தியை, கச்சிநகர்க் காவலனிடம் கூறிவிட்டு, மன்னனை வரவேற்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதிலே ஈடுபட்டிருந்தான்.

மன்னன் தன்பரிவாரங்களுடன், காட்டைக் கடந்து, கச்சிநகர் நோக்கிச் சென்றுகொண்டிருந்தான்.

உறையூரிலிருந்து, தியாகவல்லி தன்சேடியருடன், மன்னன் கட்டளைக்கிணங்க, கச்சிநகர் செல்ல ஏற்பாடுகள் செய்துகொண்டிருந்தார். அம்மங்கை சென்றால், தானும் உடன் செல்லலாம், சென்றால், வீரமணியைக்காணலாம், என்று நடனம்எண்ணினாள்.

இதற்குள், யானைப்பாகர் யானையைக் கட்டுத்தறியினின்றும் நீக்கி அலங்கார அணிகள் பூட்டி, பிடரியின்மீது பொன்பூவேலைப்பாடமைந்த மெத்தைவைத்துத்தைத்த அம்பாரியை அமைத்து, மலர்மாலைகளைச் சூட்டி யானையை அரண்மனைவாயிலிலே கொண்டு வந்து நிறுத்தினர். குதிரைப்படையினர் சிலரும், காலாட்படையில் ஒருசிலரும், இரண்டோர் தேரும், அணிவகுத்து நிறுத்தப்பட்டன. தியாகவல்லி, இந்தப்பரிவாரம் புடைசூழ, நகர இராசவீதி வழியே சென்று, உறையூரைக்கடந்து, கச்சிநகர் போகலானார்.

மன்னனும் பரிவார சகிதம் கச்சிநகர் புகுந்த அன்று, கண்கொள்ளாக் காட்சியாகஇருந்தது. காஞ்சிபுரத்திலே, குதூகலம் சொல்லிமுடியாது. வீதிகளிலே புதுமணல்பரப்பி, நகரமாந்தர், தோரணங்கள் அமைத்து ஊரை அலங்கரித்தனர். மாளிகைகளுக்குப் புதுச்சுண்ணம் பூசினர், வாழை கமுகு கட்டினர், மகர தோரணமமைத்தனர், ஒவ்வொருவரும் தத்தமது மனையிலே மணவினை நடத்தல் போலவும் விழா நடப்பது போன்றும் கருதி மகிழ்ந்து, புத்தாடை அணிந்து புன்முறுவலுடன் மன்னன் வருகையை எதிர்நோக்கி நின்றனர். குலோத்துங்கனின் கீர்த்தி, மக்களின் மனதைக் கவர்ந்திருந்தது. மூவேந்தருள் சிறந்தும், முடிமன்னர்கள் பலரைத் தனக்குக் கப்பம் செலுத்துவோராகப் பெற்றும், வடநாட்டவர் அஞ்சிட வாழ்ந்த வல்லமைமிக்க மன்னனின் ஆட்சியிலே இருப்பதை ஓர் பெருமை எனக்கருதிய மக்கள் மன்னனைக் காணவும், கண்டு களிப்படையவும், போற்றவும் வாழ்த்தவும், சமயம் வாய்த்ததைக் கண்டு மகிழ்வுற்றனர். கவிவாணர்கள் இனி நம்மை வறுமைவிட்டது என்று எண்ணினர், சிற்பிகள் நமது திறனைக்காட்டி மன்னன் மகிழ்ச்சியைப் பரிசாகப் பெறுவோம் என்று கருதிக் களித்தனர். இசைவல்லோர் புதுப்பண்கள் அமைத்தனர். ஆடலழகியரும் சதங்கைக்கு மெருகிட்டனர். வீரர்கள் தத்தமது ஆயுதங்களைச் சரிபார்த்துக்கொண்டனர், சிலம்பக் கூடங்களிலே சிரிப்பு! மாடமாளிகைகளிலே மகிழ்ச்சி! ஊரெங்கும் குதூகலம். கச்சிநகரே புத்துருப்பெற்றதோ என்று வியக்கும் வண்ணம் நகரமாந்தர், நானாவிதமான முறைகளிலே ஊரை அலங்கரித்து விட்டனர். ஊர்ப்புறத்தே கச்சிக்காவலன், படைகளுடன். காத்திருந்தான். அரச பவனிக்காக யானை, குதிரை தேர்கள் அணிவகுத்து நிறுத்தி வைக்கப்பட்டன. மன்னன் ஊர்ப்புறத்தே வந்ததும், முரசு முழங்கிற்று, முரசொலி கேட்டதும், வந்துவிட்டார் மன்னர். மன்னர் வருகிறார்!" என்று ஊரே உற்சாகத்துடன் ஒலித்தது. பவனி நடந்தது. தோற்கருவி, துளைக்கருவி, கஞ்சக்கருவி, நரம்புக் கருவி, ஆகியபல்வேறு இசைக்கருவிகள் ஒலித்தன! வாழ்த்தொலி கடலொலிபோல் கிளம்பிற்று. மன்னர் மன்னவா! வருக! எம்மை வாழ்விக்கும் இறையே வருக! மூவேந்தருக்கு முதல்வா வருக! முத்தமிழ் வளர்க்கும் வித்தகா வருக! என்றுபராக்குக் கூறினர் பாணர். "வையகம் போற்றும் மன்னர் வாழ்க! வாகைசூடிய வேந்தர் வாழ்க! சோழகுல ஜோதிவாழ்க!" என்று மக்கள் ஆனந்த ஆரவாரம் செய்தனர். வீதிகளிலெல்லாம் மக்கள் திரள்திரளாகநின்று மன்னனை வாழ்த்தி வரவேற்றனர். மாடங்கள் மீது மங்கையர்நின்று மன்னன்மீது மலர்தூவினர். சிறுபிள்ளைகள் யானை குதிரை, சேனையைக் கண்டு வியந்தனர். ஆடம்பர ஊர்

வலத்துக்குப்பிறகுமன்னன் சித்திரமண்டபம் சென்று தங்கினான். சித்திரமண்டபம், முத்தமிழ் மண்டபமாயிற்று. விழாக்காண வெளியூரிலிருந்தும் பலர் வந்திருந்தனர். விருந்தும் வேடிக்கையும், அமோகம். மன்னன் சின்னாட்கள் அங்கு தங்கினான். இதற்குள் எழிசை வல்லியாரும் வந்து சேர்ந்தனர் ஒவ்வொருநாளும் அறிஞர்கள் உரையும், ஆடலழகிகளின் நடனமும், இசைவிருந்தும், நடைபெற்றன. பலபுலவர்கள் தமது நூற்களை அரங்கேற்றினர்! புதுப்பண்களைப் பாடிக்காட்டி இசைவாணர்கள் பரிசுகள் பெற்றனர். ஓவியக்காரரும், தத்தமது திறனை மன்னன் முன் காட்டி மகிழ்வித்தனர், மன்னன், பரிசுகள் பலவழங்கி அவர்களை மகிழ்வித்தான்.

ஆனந்தமாகச் சிலநாட்கள் கழிந்தபிறகு, மன்னன் அரசகாரியங்களைக் கவனிக்கலானான். நாட்டைத் திருத்தத் திட்டங்கள், ஆறுகளை நீர்ப்பாய்ச்சனத்துக்குப் பயன்படுத்தத் திட்டங்கள், உழவுமுறை பற்றிப் புதுஏற்பாடுகள், பாலங்கள் அமைக்கும் திட்டங்கள் போன்றவற்றைப்பற்றி நிபுணர்களுடன் மன்னன் கலந்துபேசினான். மக்களின் வாழ்க்கையிலே குறைபாடுகள் உள்ளனவோ என்று விசாரித்தான். அதுசமயம் பழுத்தஉடலும், நரைத்ததலையும் படைத்தகிழவரொருவர், மன்னனிடம் வந்துநின்று 'மன்னவா உன் ஆட்சிகண்டு ஆனந்திக்காதவர் இல்லை. தமிழகத்தின் தனிச்சிறப்பை நீ விளக்குகிறாய், ஆனால்..............'' என்று இழுத்தாப்போல் பேசிடவே, மன்னன், "முதியோரே! ஆனால்........என்றீர், முடித்தீரில்லையே. நான் மன்னன், ஆனால் உம்போன்ற பெரியார்களின் மொழிதான் எனக்குச்சட்டம். உமது மனதிலே குறையுளதேல், தயங்காது கூறுக என்று கேட்க, அம்முதியோர், "எனக்கொன்றும் குறைஇல்லை கொற்றவனே! ஆனால், காலப்போக்கு என்நெஞ்சை வருத்துகிறது" என்றார். "என்ன காலப்போக்கிலே உள்ள குறை, தெளியக்கூறுமின்" என்று மன்னன் அன்போடு வினவினான். முதியோர்,'' அரசே! இரண்டோர் நாட்களுக்குமுன்பு இங்கோர் ஆரியப்பண்டிதன் தனது கலைபற்றிப்பேசிடக் கேட்டேன். அவன் போன்றார் "செய்துவைத்த பிரசாரம், காலப்போக்கைக் கெடுத்துவிட்டது என்பதே என்போன்றவர்களின் அபிப்பிராயம். தமிழகத்திற்கு, ஆரியம், புதியதோர் ஆபத்தோ என்று நாங்கள் அஞ்சுகிறோம். அவ்வளவே என்குறை'' என்றுரைத்தார். மன்னன் சற்றுநேரம் யோசித்துவிட்டு, "பெரியவரே! அஞ்சாதீர்! அவர்களின் கலை, நீர்மேல் எண்ணெய்ப்போல் தமிழகத்திலே மிதப்பதைநானும் கண்டேன் நாலா வட்டத்தில், அதை நீக்குவோம், இது உறுதி, ஆரியர், தமிழகத்திலே, தமது ஆதிக்கத்தைப்புகுத்தார் புகுத்தமுயன்றால், கனகவிசயர் கண்டகதியே காண்பர்'' என்று உறுதி கூறித்தேற்றினான்.

"மன்னர் மன்னவ! சிற்றரசர்கள் கப்பம் அனுப்பியுள்ளனர். கொலுமண்டபத்துக்கு அவர்களை அனுப்பவோ" என்று வீரமணி, மன்னனைக்கேட்க, மன்னன் "ஆம்" என்றுரைத்துவிட்டு, கொலுமண்டபம் சென்றமர்ந்தான். குலோத்துங்கமன்னருக்குத் இறையனுப்பியமன்னர்கள் பலப்பலர். கன்னடர், பல்லவர், கைதவர், காடவர், கோசலர், கங்கர், கராளர், கடம்பர், துளும்பர், வங்கர், மராடர், விராடர், கொங்கணர், முதலிய பல்வேறு வட்டாரமன்னர்கள், பொன்னும் மணியும், வேழமும் புரவியும், ஆரமும் பிறவுமாக, பலவகை இறைப்பொருளை மன்னன் முன்குவித்துக் கும்பிட்டு ஒருபுறமொதுங்கி நின்றனர். **கருணாகரத் தொண்டைமான்**, தூதுவர்கள் கப்பம்செலுத்திக்கொண்டிருக்கும்போதே, சற்றுச்சீற்றத்துடன் காணப்பட்டார். வீரமணியும் மற்றும்சில படைத்தலைவர்களும், மெல்ல எதோ பேசிக்கொண்ட மன்னனையும் தொண்டைமானையும், மாறிமாறிப்பார்த்தனர். மன்னன், கப்பம் செலுத்தியோரை ஒருபுறம் நிறுத்தி, அவரவர் ஊர்வளம் விசாரித்து, "நம்மால் உமது மன்னனுக்கு ஏதேனும் உதவி தேவைஎனில் கூசாது கூறுமின்" என்றுகேட்டு உபசரித்தான். "அரசர்க்கரசே! உமது ஆணையே எமது அரசுகளை எல்லாம் அரண்போல் காத்து நிற்கிறது, குறைவேதுமில்லை" என்றனர், இறை கொணர்ந்தோர்.

"கவிதைகள் காவியம் உயர்கலைகள், சிற்பம் முதலிய விசேடங்கள், உமது நாடுகளிலே உள்ளனவோ, நாமறியக்கூறுமின்" என்று மன்னன்கேட்க, அவரவர்கள் தத்தம் நாட்டிலேஉள்ள நயங்கள் உரைத்துநின்றனர். இவை ஒன்றையும் தொண்டைமான் கவனிக்கவில்லை. அதுசமயம், தொண்டைமான், சோழமன்னனின் படைபலக்கணக்கிலே கவனம் செலுத்தியிருந்தான், காரணத்தோடு!

மன்னன் திடீரென்று, தொண்டைமானை நோக்கி, "இறைசெலுத்தத் தவறியவர் எவரேனுமுண்டோ?" என்று கேட்டான். கொலுமண்டபம் நிசப்தமாவிட்டது. கோபக்குரலுடன், "வேந்தே! கலிங்கநாட்டு மன்னன் அனந்தவன்மன் மட்டுமே கப்பம்செலுத்தவில்லை" என்று திருமந்திர ஓலைநாயகன் கூறினான். குலோத்துங்கள் முகத்திலே குறுநகைபிறந்தது! அதன் பொருள் என்ன என்பதை அங்கிருந்தோர் அறிவர். சபை கலக்கப்பட்டது. தொண்டைமானின் விழியும் விஷயத்தை வெளிப்படுத்திவிட்டது! மன்னனின் புன்முறுவல், இட்டகட்டளை, "தூக்குவீர் கத்தியை!" என்பதே! உறைகளிலிருந்து வாளைஉருவிட இலட்சக்கணக்கான வீரர்கள் தயார்! தயார்! என்றனர்.

(தொடரும்)

## மாயவரத்தில் நீதிக்கட்சிமாநாடு.

தஞ்சைஜில்லா நீதிக்கட்சி மாநாடு 2—8—42 காலை 8-மணிக்கு மாயவரம் முனிசிபல் பார்க்கில் அமைக்கப்பட்டிருந்த மணிமண்டபத்தில், **ராவ் பகதூர் N. R. சாமியப்பா** அவர்கள் தலைமையில் விமரிசையாக நடைபெற்றது.

ராவ்சாகிப் சோமசுந்தரம் அவர்கள் இல்லத்திலிருந்து ஊர்வலம் வாத்தியக்கச்சேரியுடனும், தொண்டர் முழக்கத்துடனும் சென்றது. தோழர் அண்ணாத்துரை கொடிஏற்றுவிழா வாற்றினர். **பெரியார்** திறப்புவிழா வாற்றினர். வரவேற்புக்கழகத் தலைவர் தோழர் சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் உடல்நிலமின்றி இருந்ததால், ராவ்சாகிப் சோமசுந்தரம் அவர்கள் வரவேற்புரையை வாசித்தார். ராவ்பகதூர் சாமியப்பா அவர்கள் தலைமைவகித்து அரியதோர் சொற்பொழி வாற்றினர்.

திருப்பூர் தோழர் மொய்தீன் தற்கால அரசியல் நிலைமை எனும் பொருள்பற்றிப் பேசினர்.

பிற்பகலில், பலதீர்மானங்கள் நிவறவேறின. திராவிடநாடு, பாகிஸ்தான் பிரச்னைகளை விளக்கி, பெரியார், மொய்தீன், அண்ணாத்துரை ஆகியோர் சொற்பொழி வாற்றினர்கள். தலைவர்முடிவுரை, வந்தனம் கூறலுடன் மாநாடு இனிது முடிந்தது.

## அலகாபாத் சர்வ கலாசாலை

மேற்படி சர்வகலாசாலையின் விழாவின்போது கொடியை இந்து மாணவர்கள் ஏற்றுவித்தால், மனபேதம் ஏற்பட்டது. இதன் பயனாக சர்வகலாசாலை முஸ்லிம மாணவர்கள், தனிக் கழகம் ஏற்படுத்திக் கொண்டனர்.

முஸ்லீம் மாணவர்கள் பாகிஸ்தானைப் பரிபூரணமாக ஆதரிக்கிறார்கள்.

வார்தா முனிவர், (9-ம் பக்கம் தொடர்ச்சி)

மானம் முதலிய கொள்கைகளைப் பிரிட்டன் பேசுவதால், நம்மைப் பார்த்து, "பிளாசியில் பிடித்ததை மற்றோர் பிளாசி ஏற்பட்டால்தான் மீட்டுக்கொள்ள வேண்டும்" என்று கூறவில்லை. அங்ஙனம் கூறி விட்டால், உமது வண்டவாளம் விளங்கி விடுமே, தம்பி! இதைப் பலமுறை யோசித்துப்பார்.

நாட்டிலே, பிரிட்டிஷார் வெளியேறிவிட்டால் குழப்பம் விளையுமே, சட்டமும் சாந்தியும் இராதே, என்றுரைப் போரிடம், சகலமும் தெரிந்தவர் போல், "வரட்டுமே! அந்த வேதனையையும் பொறுப்போம்" என்று வீம்பு பேசுகிறார்கள் தேசீயத் தோழர்கள். அதன் விளைவு என்ன ஆகும் தெரியுமோ! மதியிருப்பின் யோசித்துப் பார்க்கட்டும்! பர்மாவிலே, எதிரியின் பிரவேசம் நேரிட்டதும், பிரிட்டிஷ் படை வாபசானதும், என்ன நடந்தது? பர்மாக் காரன்கத்திக்கும் இந்தியனின் கழுத்துக்கும் பொருத்தம் ஏற்பட்டது! இந்தியரின்கதிபற்றி, நடந்து வந்தவர்கள் கூறுவதைக் கேட்டுவிட்டுப் பிறகு சட்டமும் சமாதானமும் போனால்தான் என்ன என்றிருக்கும் போக்குச் சரியானதாகுமா என்று யோசித்துப் பார்க்கட்டும்!

எனது இனத்தவரைப் பற்றி நான் கவலைப்படவில்லை. அவர்கள் அம்சதூளிகா மஞ்சத்திலே படுத்துக்கொண்டு அப்சர சகிகளுடன் கொஞ்சிக்கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கவில்லை. அவர்கள் மீது துவேஷமோ, கோபமோ கொண்டவர்கள் இல்லை, ஒரு சிறு கூட்டத்திற்கு துவேஷ மிருப்பினும், அது வெள்ளத்தின் மீது மிதக்கும் தோணி போல், சூறை மோதியதும் சுக்கு நூறுகிவிடும்! நான் குழப்பம் வேண்டாம், கொந்தளிப்பு வேண்டாம், சட்டம் சரிந்து சாந்தி சாய்ந்து விடக்கூடாது என்று கூறுவது, ஆரியத்தோழர்களையும், வடநாட்டிலே வாட்ட வருத்தமின்றி உலவும் ஆரியதாசர்களையும் மனதிலே எண்ணி, அவர்களிடம் பரிதாபங்கலந்த பாசம் கொண்டே தான். வல்லமை பொருந்திய பிரிட்டிஷ் ஆட்சி, காந்தியர்களின் வாய்ப்பேச்சினாலே ஓடி விட்டது என்ற நிலைமை உண்டானால், தேசியத் தம்பி பாகிஸ்தானமும், திராவிட நாடும் தேவை என்று கூறுவோர், என்னென்ன எண்ணுவர், ஏதேது செய்ய முனைவர் என்பதைப்பற்றியும் சற்று எண்ணிப்பார்! அதற்கு முன்பு, வல்லமையுள்ள பிரிட்டிஷாரும் வெளியே போய் விட்டனர், இனி உள்ளே நுழைவதிலே தடை இல்லை என்று ஜப்பானியர்கள் எண்ணுமலிருப்பார்களா என்பதையும் யோசித்துப்பார். பிறகு உனது போரைத்துவக்கு.

---

## தேசூரில் நீதிக்கட்சிக் கூட்டம்

வந்தவாசி தா. தேசூரில் 30—7—42. மாலை 4-மணிக்கு தோழர் மாணிக்கமுதலியார் தலைமையில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அது சமயம் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் திராவிட நாட்டுப் பிரிவினையின் அவசியமும் திராவிடர்கள் கடமையும், என்பது பற்றி விரிவாகச் சொற்பொழிவாற்றினர்.

தோழர் C. P. சின்னராசு அவர்கள் ஆரியரால் கையாளப்பட்ட மூடப்பழக்கங்களை ஒழித்தால் தான் திராவிடர்களாகிய நாம் முன்னேற முடியும் என்று சொற்பொழிவாற்றினார் தலைவர் முடிவுரைக்குப்பின் தோழர் ரங்கசாமி முதலியார் வந்தனோபசாரம்கூறக் கூட்டம் இரவு 9-30மணிக்கு இனிது முடிந்தது. பெரியாருக்குத் தேசூர் தமிழன்பர்கள் சார்பாக வரவேற்புப்பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது.

வந்தவாசி தாலுக்கா

## முதலாவது நீதிக்கட்சி மாநாடு

வந்தவாசியில் விமரிசையாக நடந்தேறியது

வந்தவாசி தாலுக்கா முதலாவது நீதிக்கட்சி மாநாடு, வந்தவாசியில் ராஜலட்சுமி சினிமா தியேட்டரில் தோழர் P. M. சிவராம ரெட்டியார் தலைமையில் விமரிசையாக நடைபெற்றது.

தோழர் சீனுவாசன் அவர்கள் மாநாட்டைத் திறந்து வைத்தார். தோழர் சீனுவாசன் அவர்கள் திராவிடநாட்டுப் பிரிவினையின் அவசியமும் திராவிடர்கள் செய்யவேண்டிய முக்கிய கடமையும் என்பதுபற்றி விரிவாகச் சொற்பொழிவாற்றினர்.

வரவேற்புக்கமிட்டித் தலைவர் தோழர் E. தங்கவேலர் அவர்கள் நீதிக்கட்சியின் சிறப்புகளை எடுத்துரைத்துவிட்டு மாநாட்மெக்களை ஆவலுடன் வரவேற்றுக் கொடிஏற்றிவைத்தார்.

வழியில் சில எதிர்பாராதவிதமாகப்பஸ் பஞ்சர் ஆகிவிட்டதால் பெரியார் மாநாட்டிற்குப் பகல் 11மணிக்கு வந்தார். பெரியார் மாநாட்டிற்குள் வந்ததும் மக்கள் வெகு ஆவலுடன் கூடி வரவேற்றார்கள்.

பெரியார் வந்ததும்தோழர் M. இராசரத்தினம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர்.

மாநாட்டுத் தலைவர் பெரியார் அவர்களைப் பேசும்படி கேட்டுக்கொள்ளப்பெரியார் அவர்கள் நீண்ட கைதட்டுதலுக்கிடையே எழுந்து தற்கால அரசியல் நிலைமை திராவிடநாடு ஏன் பிரிக்கப்படவேண்டும். திராவிடநாடு பிரிக்கப்படுவதால் நமக்கு ஏற்படும் நன்மை; பொதுமக்கள் அமைதி குலைக்கவும் நாட்டிற்கு கிளர்ச்சியை உண்டுபண்ணவே காந்தியார் புதுப் போர்த்திட்டம் ஆரம்பிக்கப்போகிறார் என்றும் அத்திட்டத்தின் கேடுகள் பற்றியும் 2மணி நேரம் மிகவும் விரிவாகவும் தெளிவாகவும் சொற்பொழிவாற்றினர்

விருந்துக்குப் பிறகு விஷயாலோசனைக் கமிட்டிக்கூட்டம்நடைபெற்றது. மாலை 3மணிக்கு மாநாடுமீண்டும்கூடியது.

திராவிடநாட்டுப் படத்தை தோழர் K. S. மஹ்தும் சாயபு அவர்களும், செல்வம படத்தை தோழர் திருவத்திபுரம் சுப்ராய முதலியார் அவர்களும். பெரியார் படத்தை தோழர் M கந்தசாமி அவர்களும். ஜனாப் ஜின்னா படத்தை தோழர் வேலூர் ஜனார்த்தனம் B A. அவர்களும் திறந்து வைத்தனர்.

1. காலஞ்சென்ற பச்சையப்பன் கல்லூரித் தலைமை ஆசிரியர் V. திருவேங்கிடசாமிப் பிள்ளை அவர்களுக்கும், காஞ்சி மணி அவர்களுக்கும்; மாநாடு மூலமாக அநுதாபத் தீர்மானம் நிறைவேறியது.

2. திராவிடநாட்டுப் பிரிவினை, பாகிஸதான் பிரிவினை, நேசநாடுகள் இந்த யுத்தத்தில் வெற்றிபெறவேண்டும், காந்தியாரின் புதுப்போர்த் திட்டத்தை மக்கள் மனதார எதிர்க்க வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேறின தீர்மானங்களை ஆதரித்துத் தோழர்கள் வேலூர் C. P. சின்னராசு, திருப்பூர் மொய்தீன், S. V. லிங்கம் முதலியோர் சொற்பொழி வாற்றினர்

மாநாடு மாலை 5மணிக்குத்தலைவர் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரம் கூற இனிது முடிந்தது.

---

## இடம், பொருள், ஏவல்!

பிரிட்டிஷாரே வெளியே போ! என்ற இயக்கத் தீர்மானம் நிறைவேற்றக் காங்கிரசார் கூடியுள்ள இடம் எது? பம்பாய் பிர்லா மாளிகை!

இதன் பொருள் என்ன? நாட்டை ஜப்பானியருக்குக் காட்டிக் கொடுப்பது.

யார், காந்தியாரை இவ்விதம் செய்யும்படி ஏவுகிறார்கள்? ஜப்பானியர்களிடம் ஏஜண்டுகளாக இருந்து, தென்னாட்டைச் சுரண்டும் நோக்கங் கொண்ட வடநாட்டு முதலாளிகள்!

இந்த இடம், பொருள், ஏவல், விளங்கிய பின், எவர், காந்திய இயக்கத்தை ஆதரிப்பர்!

**காஞ்சீபுரம் பண்ட்ஸ் Ltd,**

**காஞ்சிபுரம்**

மாதம் ரூ. 25. சம்பளத்தில், நம்பிக்கையும் செல்வாக்குமுடைய ஏஜண்டுகள் ஒவ்வொரு ஊரிலும் தேவை. மற்ற விவரங்களுக்கு 0—1—6 ஸ்டாம்பு அனுப்பவும்.

K. R. CHARY, B. A., Secretary.



# திராவிடநாடு

ஞாயிறு] 9—8—42 [காஞ்சி.


# மானங்கெட்டது!

"என்ன இருந்தாலும், இதை வெளியே சொல்லியிருக்கக் கூடாது."

"மூடிவைக்க வேண்டுமா? உடந்தையாக இருக்க வேண்டுமா? நடந்த சேட்டை தெரிந்திருந்தும் நமக்கென்னவென்று இருந்திருக்கவேண்டுமா? வெகுநன்று! அவள் சோரநாயகனுடன் சோலையிலே சொகுசாக விளையாடிக்கொண்டிருந்ததை நான் கண்களால் கண்டேன். கண்டதை விண்டேன். இவள் இத்தகைய காதகி என்பது தெரியட்டும், ஊர் இவளுடைய நடத்தையை அறியட்டும் என்று. இது எப்படிக் குற்றமாக முடியும்? அவள் பூசிய மஞ்சளும், குங்குமப் பொட்டை கோணலின்றி வைத்ததும், நாணியதும் கோணியதும் நாடறியும். அண்டை வீட்டுகாரனையோ எதிர்வீட்டுக்காரனையோ பார்த்து விட்டால் பயப்படுவது போல, அவள் செய்த பாசாங்கு கொஞ்சமா? அந்த வேடத்தைக் கண்டநானே இதே கண்களால் அவள் முள்வேலியைத் தாண்டியதையும், கொஞ்சியதையும் குலுக்கியதையும், கொடிபோல அவனைத் தழுவிக்கொண்டதையும் கண்டேனே, கண்டதைக் கூறாதிருக்க என்மனம் இடந்தரவில்லை."

"சரிதானப்பா! ஏதோ இலைமறை காயாக எதுவோ நடந்துவிட்டது, அதை வெளியே சொல்லிவிட்டாயே அவள் மானம் போயிற்றே, அதைக்கவனி."

"போகட்டுமே, எனக்கென்ன"

கள்ளப்புருடனைக்கூடிய ஒரு கள்ளி, வேடத்தால் பத்தினி, நடத்தையாலோ நாசகாலி, அவளது செயலைக் கண்டவன், ஊராரிடம் கூறிட அவன் நண்பன், இதை ஏன் வெளியே சொன்னாய், அவளுக்குவேதனை உண்டாயிற்றே என்று கேட்கிறான். கள்ளியின் கபட வேடம் கலைக்கப்பட வேண்டும் என்பதற்காகவே கண்ணால் கண்டதைக் கூறினேன் என்று கூறுகிறான் நண்பன். இருவரின்உரை எங்ஙனமிருக்குமோ அதுவே முதலிலே நாம் தீட்டினோம்.

காங்கிரஸ் காரியக் கமிட்டியின் விவாதங்கள் அடங்கிய தஸ்தாவேஜுகளைச் சர்க்கார் கைப்பற்றி, அவைகளைத் தமது குறிப்புரையோ விளக்கஉரையோ கருத்துரையோ கலவாமல், அப்படியே பிரசுரித்து விட்டனர். இதுகண்ட காங்கிரஸ் தலைவர்களும், ஏடுகளும், கடகடவெனக் கீழே புரண்டழுவதும், தடதடவெனத் தலைமீது கைகளால் மோதிக் கொள்வதும், தகதிமி என்று குதித்துக் கூவுவதுமாக உள்ளன. கள்ளியின் கபடம்வெளியானதைப்போலக், காங்கிரஸ் தஸ்தாவேஜு காங்கிரசின் உண்மையான உள்ளத்தை உலகுக்கு உரைத்துவிட்டது. கள்ளிக்குப் பரிந்துபேசியவன், "கண்ணால் கண்டாலும் வெளியே சொல்லி அவளுக்கு வேதனை மூட்டலாமோ" என்றுவாதாடினது போலக், காங்கிரஸ்ஏடுகள், காங்கிரஸ் தஸ்தாவேஜுகளைச் சர்க்கார் வெளியிட்டதுபற்றி, வாதாடுகின்றன.

காங்கிரசிடமிருந்து கைப்பற்றப்பட்டதாம் தஸ்தாவேஜுகள். ஆகவே அது திருட்டுச் சொத்தாம். எனவே, அதைச் சர்க்கார் வெளியிட்டது, திருட்டுச் சொத்தைக் கையாண்டது போலாகுமாம். இது காங்கிரசாரின் கோணல்வாதம். சர்க்கார் காங்கிரசின் வேடம் கலைந்து, மக்களும் உலகமும்அதன் உண்மைச் சொரூபத்தைக் காணட்டும் என்றே இதனைச் செய்தனர்.

இதனால் தெளிவானது, ஒன்று, காந்தியாருடைய கோரிக்கையைக் காங்கிரஸ் தலைவர்களிலே பலர் மெல்லவும் முடியாது விழுங்கவும் முடியாது திணறியிருக்கிறார்கள் என்பது. இரண்டாவது, காங்கிரசும் குறிப்பாகக் காந்தியாரும் ஐந்தாம் படைவேலையில் நாட்டங் கொண்டுள்ளனர் என்பது.

காந்தியாரின் இயக்கத்தைபற்றிய விவாதத்தின் போது, பண்டிதநேரு, பச்சையாகவே இதனை எடுத்துக் காட்டிவிட்டார். அச்சுநாடுகள் வெற்றி பெறுமென்ற ஆபத்தான எண்ணத்தைக்காந்தியார் கொண்டுள்ளளார் என்பதும், பிரிட்டிஷார் வெளிஏறினதும், ஜப்பானியருடன் பேரம்பேசவும் அவர்களுக்கு உடந்தையாக இருக்கவும் காந்தியாரின் தீர்மானம் இடங்கொடுக்கிறதென்பதும், பண்டிதரின் கருத்து. இது விவாதத் தஸ்தாவேஜுகளிலிருந்து நன்கு புலனாகிவிட்டது.

இதனை வெளியிட்ட சர்க்கார், குறிப்பாக அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் ரஷியாவுக்கும் விரோதமாக வார்தாமுனிவர் பெர்லின் பேயனுக்கும், டோக்கியோக் கபடனுக்கும் உடந்தையாக இருக்கவும் துணிந்து விட்டார் என்பதை உணர்த்தி விட்டனர். காங்கிரஸ் தேச பக்த வேடம், கள்ளியின் பத்தினிக் கோலத்தைப் போன்றதே யாகும் என்பது விளங்கிவிட்டது. இத்தகைய ஒரு கூட்டம் நாட்டிலே இருப்பதைப் போல, மானக்கேடு, ஆபத்து, அக்ரமம், வேறு இல்லை என்போம்.

சர்க்கார், இந்தத்தஸ்தாவேஜுகளை வெளியிட்டது "மானங் கெட்ட பிரசாரம்" என்று ஒரு மரமண்டை கொண்ட ஏடு கூறுகிறது. பிரசாரம், சர்க்கார் செய்யவில்லை! மானங்கெட்டதை, மக்களுக்கு எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். காங்கிரசின் மானம்கெட்டு விட்டது என்பதைத்தான் சர்க்கார் காட்டிவிட்டனர். ஆம்! மானங்கெட்ட அரசியல் விபசார மடமாகி விட்டது வார்தா! மக்களின் எதிர்காலத்துக்கு உலைவைக்கும் உலுத்தரின் இடமாகி விட்டது! ஜனநாயகத்தை மாய்க்கும் கொலைக்களம், வர்ணாஸ்ரமிகளின் வாசஸ்தலம், வடநாட்டு முதலாளிகளின் இருப்பிடம், கபட வேடதாரிகளின் காவற்கூடம், ஏமாளிகளுக்கு ஏதேதோ கூறி ஏய்க்கும் இயந்திரம் ஓயாது வேலை செய்யும் இடமாகிவிட்டது, வார்தா! எனவே தான், வார்தாவின் தீர்மானத்தை, டோக்கியோவும், பெர்லினும் வரவேற்கிறது. சர்க்கார் தக்க சமயத்தில் காங்கிரசின் கபட வேடத்தை கலைத்தது மிகச்சரியான காரியம்! மானங்கெட்டதே என்று கள்ளி கண்பிசைந்து கொண்டால் கவலை என்ன? சோலையிலே சோரநாயகனுடன் சொகுசாகத் திரிந்து, பிறர் கண்ணில் சொக்குப் பொடிவீசி, மஞ்சள்பூசி, நாணிக் கோணி நடந்து, உத்தமி என்று ஊரை ஏய்த்து வருபவளின் கள்ளத்தனம் வெளிப்பட்டது, ஊருக்கு நல்லது தானே! வார்தாவனிதையும் இத்தகையவளே! அவளின் "சோர நாயகர்கள்" பெர்லின், டோக்கியோவில் உள்ளனர்! அது வெளியாகி விட்டது!!

ஊரார் உரையாடல்

# கதர்க்கடையிலே காகசஸ்!

ஒற்றன்

இடம்:: கதர்க் கடை

பாத்திரங்கள்:—சீனுவாச ஐயர், கந்தசாமிப் பிள்ளை, சுந்தர முதலியார்.

[ஐயர் வெளியே போயிருக்கும் நேரத்தில்]

கந்தசாமிப் பிள்ளை:—சுந்தரம்! சாமி எங்கே போனாரு?

சுந்தரம்:—எந்தச்சாமியைக் கேக்கறே?

கந்த:—நம்ம ஐயரைத்தான்!

சுந்தரம்:—அப்படிக்கேளேன். சாமி, சாமின்னு பூசை செய்வானேன். இப்படித்தூக்கித் தூக்கிவைத்தால், அவனுங்கதலைமேலே ஏறிக்கொள்கிறானுங்க. அதோ வாராரு, என்ன விசேஷம்?

[ஐயர் புன்சிரிப்புடனும், கையிலே பேப்பர்க்கட்டுடனும் வருகிறார்.]

சீனு:—பிள்ளையவாள்! வாங்கோ, வாங்கோ. என்ன விசேஷம்?

கந்த:—நீங்கதான் விசேஷம் சொல்லணும். பேபரு படிக்கிறீங்க. சண்டைசங்கதி எப்படி இருக்கு? ரஷியா விஷயம் என்ன நடந்தது?

சீனு:—என்ன நடந்தது? அடி-அடின்னு அடிச்சுக்கறான். கோரமான சண்டை. இரத்தப்பிரவாகம். ரஸ்டாவ் போய்விட்டதேன்னே, மளமளவென்று, பாய்கிறான்.

சுந்தரம்:—நாலு நாளாகக், கொஞ்சம் வேகம்மட்டுப்போயிருக்கே! நாஜிகளுக்கு ஏராளமான நஷ்டமாம்.

சீனு:—நஷ்டந்தான்! ஆனாலும் இன்னம் வேகம் குறையக்காணோம். இன்னம் நான் பூராவும் படிக்கல்லே. நீ படிச்சாச்சோ?

சுந்தரம்:—காலையிலேயே படித்து விட்டேன். எனக்கொன்றும், திகில் பிறக்கவில்லை.

சீனு:—உனக்குப் பிறக்காது. நீ ரஷியாக்கட்சியாச்சே.

கந்த:—அப்போ, சாமிஎன்ன, ஜெர்மன் கட்சியா?

சீனு:—அடடே! அதெல்லாம் இல்லேப்பா. வெளியே ஏதாவது பேசப்போனாலே வம்பாக இருக்கிறது. சுந்தரம், நம்ம சேர்மன் வீட்டுக்கு, உன்னை வரச்சொன்னார். போய்விட்டு வந்துவிடேன்.

[தன்னை வெளியே அனுப்பிவிட்டு, கந்தசாமிப் பிள்ளையிடம் வம்பளக்க ஐயர் கருதுவதைத் தெரிந்துகொண்ட சுந்தரம், ஐயரை முறைத்துப்பார்த்து விட்டுச் சேர்மன் வீட்டுக்குப்போகப் புறப்பட்டு விட்டான். அவன் போனபிறகு ஐயர் ஆரம்பித்தார்]

சீனு:—ஹிட்லருடைய படைகள் மிக்கஉக்கிரமாகச் சண்டையிடுகின்றன. காகசஸ், எண்ணெய்க்கிணறுகளுக்காகச் சண்டை நடக்கிறது. பெட்ரோல் இல்லாமல் இந்தக்காலத்துச்சண்டை நடக்காது. அந்தப்பெட்ரோல் பிரதேசத்தைப் பிடித்துக்கொள்ளவே பெரிய போர் நடக்கிறது.

கந்த:—ரஷியர்கள், எப்படிச் சண்டை செய்கிறார்கள்?

சீனு:—அவர்களும் விடவில்லை. ரஷியத்தலைவர் ஸ்டாலின், இனிமேல் ஒரு அடிகூட பின்வாங்கக்கூடாது. எதிர்த்து நிற்கவேண்டும் என்று உத்தரவிட்டுவிட்டார். அதனாலே வீரமான போரிடுகிறார்கள். ஆனால், ஜெர்மன்சேனை பிரம்மாண்டமானது. எத்தனை இலட்சம்பேர் இறந்தாலும் பரவாயில்லை என்று துணிந்து சண்டை போடுகிறார்கள்.

கந்த:—ராஸ்டாவைப் பிடித்துவிட்டபிறகு, வேறெந்த ஊரைப்பிடித்தார்கள்?

[சுந்தரம், வேலையை முடித்துக்கொண்டு வந்து சேருகிறான்].

சீனு:—வேறே ஒரு ஊரையும் பிடிக்கவில்லை. ஆனால், ரஸ்டாவ் பிடித்தது, பெரிய வெற்றி. ஏன், சுந்தரம், சரிதானே நான் சொல்றது?

சுந்தரம்:—ரஸ்டாவிலே, ஜெர்மானியர் வெற்றி பெற்றார்கள் என்பது உண்மைதான். ஆனால். போன வருஷமும், ரஸ்டாவை ஜெர்மானியர் பிடித்தனர், என்ன நடந்தது? ரஷியச் சேனை சீறி விழுந்து மீண்டும் போரிட்டு, ரஸ்டாவைத் திருப்பிப் பிடித்தது. நீங்கள், ஜெர்மன் வெற்றியைச் சொல்கிறீர்களே தவிர, அதற்கு ஏற்பட்ட நஷ்டத்தைச் சொல்வதில்லை. டான் நதி, இரத்த ஆறாகிவிட்டது. ஜெர்மன் பிணங்கள், கருகிய விமானங்கள், தூளான மோட்டார், எவ்வளவு என்று எண்ணுகிறீர்கள்.

கந்த:—ஏன் சாமி சுந்தரம் சொல்வதைப் பார்த்தா, ஜெர்மனி, இப்படிப்பலி கொடுத்து ரொம்ப நாளைக்குத் தாக்குப் பிடிக்காது போல் தோன்றுகிறதே.

சீனு:—ஒரு விதத்திலே உண்மை தான் நீ சொல்வது. ஆனால்...........

சுந்தரம்:—ஆனால், என்ன? வாரனேஷ் களத்திலே, வாட்டி விட்டார்கள் ஜெர்மன் துருப்புகளை, லெனின் கிராட் களத்திலேயும், காலினின் களத்திலேயும், ரஷியரின் கைதான் ஓங்கி இருக்கிறது. காகசஸ் களத்திலே கூட, இப்போது ரஷியர்கள் முன் காட்டியதை விடப் பலமடங்கு அதிகமான வீராவேசம் காட்டுகிறார்கள். பல்கேரியர், ருமேனியர், ஹங்கேரியர், போன்ற கூலிப்படைகளைக் காவு கொடுத்துக் கொண்டிருக்கிறது நாஜி பூதம்.

கந்த:—ஏனப்பா சுந்தரம்! ரஷியர்கள் வீரமாகப் போரிட்டும் ஏன் தோற்கிறார்கள்?.

சுந்தரம்:—ஜெர்மன் முழுச்சக்தியும் ரஷியாமீது திரும்பி இருக்கிறது. நான் முன்னே சொன்னபடி பல அடிமை நாடுகளில் பலிக்கடாக்கிடைக்கிறது. வஞ்சகப் போரும் நடக்கிறது. ரஷியப்போர் வீரர்கள் போல உடை உடுத்திக்கொண்டு, ரஷியப்படைவரிசையிலே புகுந்து கொள்ளக்கூட நாஜிகள் முயற்சித்தனர். விடவில்லை ரஷயர்கள். வேஷத்தைக்கண்டு பிடித்துவிட்டனர்.

சீனு:—சேர்மன் வீட்டுக்குப்போன காரியம் முடிந்து விட்டதோ?

சுந்தரம்:—திவ்யமா முடிந்துவிட்டது! அவர் இந்தத்தடவை ஜெயிலுக்குப் போகப்போகிற தில்லையாம். காரியக்கமிட்டி வற்புறுத்தினால், காங்கிரசிலிருந்தே ராஜிநமாச்செய்துவிடப் போகிறாராம்.

சீனு:—சரி! இதை வெளியே எங்கேயும் வம்பளக்க வேண்டாம்.

சுந்தரம்:—எனக்குத் தெரியாதே வம்பளக்க.

கந்த:—எந்தஊரு சேதி பேசறிங்க?

சுந்தரம்:—நம்மஊரு சேதிதான்.

கந்த:—இதுகிடக்குது, தள்ளப்பா. அலையாது எது? தலை முழுகுவதுஎது? ரஷியா விஷயத்தைச் சொல்லு. ஐயரு சொல்றதைப் பார்த்தால், அடிவயிறு பகிரென்னுது.

சுந்தரம்:—நிலைமை கஷ்டமானது தான். திகில் வேண்டியதில்லை. காகசஸ் பிரதேசத்தைப் பிடித்துவிட்டு, ரஷியாவிலேஉள்ள மற்றப்பாகத்தோடு தொடர்பு இல்லாதபடி செய்துவிடவேண்டுமென்பது நாஜி எண்ணம். இரண்டுபிரிவாகப் பாய்கிறார்கள். பச்சு என்ற இடத்தின்மீது மோகம். ஸ்டாலின் கிராடு மீதும் நாட்டம். வான்பக் இருக்கிறாரே, ஜெர்மன் சேனாதிபதி அவருடைய போர்த்திறனுக்கு, ரஷிய சேனாதிபதி இருக்கிறாரே மார்ஷல் டிமோஷெங்கோ, 'அவருடைய திறம் குறைந்ததல்ல. தரையிலே சண்டை நடப்பது போலவே வானத்திலேயும் சண்டைதான்.

கந்த:—அதுவும் நடக்குதா?

சீனு:—ஜெர்மனிதானே விமான பலத்திலே கெட்டிக்காரன். லண்டனைப்போன வருஷம் தூளாக்கிவிட்டானே தெரியுமோ!

சுந்தரம்:—அது பழயகதை. இப்போ, நிலைகிழாகமாறிவிட்டது. பிரிட்டிஷ் விமானபலமே இப்போ முதல் தரம். ஜெர்மன் நகரங்களிலே இராத்தூக்கம் கிடையாது. தொழிற்சாலைகள்மீது குண்டுமாரி பொழிகிறார்கள். ரஷிய களத்திலே ஆகஸ்ட இரண்டாந் தேதிக் கணக்குப்படி 286, ஜெர்மன்விமானங்கள் ரஷியரால் சுட்டுவிழ்த்தப்பட்டன. ரஷியாவுக்கு 201, விமானம் நஷ்டம். கடுமையான சண்டைதான் வானத்திலும்நடக்கிறது. 3000 சதுரமைல்பிரதேசம் போர்க்களம், இங்கு இனி ஒருஜெஜ தூரம்கூட பின்வாங்குவதில்லை என்ற உறுதியுடன் ரஷயப் படைகள் போரிடுகின்றன. வோல்கா, டான், க்யூபான், ஆகிய பிரதேசங்களிலே, காசாக் என்ற வகுப்பினர் உண்டு. இவர்கள் குதிரைப் படையினர். உலகக்கீர்த்தி பெற்றவர்கள். இந்தக் காசாக் குதிரைப் படையினர் இப்போது கிளம்பியுள்ளனர். ஜெர்மன் துருப்புகளைத் துரத்தியடிக்கப் பத்துநாட்களாக வாரனேஷிலே எப்படி ஜெர்மனியரால் முன்னேற முடியவில்லையோ அதைப் போலவே காகசசிலும் முடியவில்லை.

கந்த:—அப்படின்னு, கொஞ்சம் நம்பிக்கை இருக்குது.

சுந்தரம்:—நிச்சயமாக நம்பிக்கை இருக்கிறது. முன்பு நாஜிப்படைகள் மாஸ்கோவரையில் வரவில்லையா?

கந்த:—ஆமாம்! உலகமே ரஷியா போச்சு என்று சொல்லிவிட்டதே. மழைகாலம் வந்துதானே நிலைமையை மாற்றிவைத்தது.

சுந்தரம்:— அந்த மழைகாலம் வரத்தான் போகிறது. இப்போ ஆகஸ்ட். இந்தமாதம் தீர்ந்தால் செப்டம்பர் மழைகாலம், அப்போ மறுபடியும் ரஸ்டாவ், செபாஸ்டபூல் ஆகிய கோட்டைகளை ரஷியச்சேனை திருப்பிப் பிடித்துவிடும்.

சீனு:—ரஷியா தீரமாகத்தான் சண்டைபோடுகிறது. பிரிட்டிஷார்தானே கல்லுப்பிள்ளையார்போலே இருக்கிறார்கள். இரண்டாம் போர்முனை ஆரம்பிக்கப்படாதோ?

சுந்த:—அந்தயோசனை பலமாகிவிட்டதே. அமெரிக்க சேனாதிபதி ஜெனரல் மார்ஷல் இருக்கிறாரே, அவரை நேசநாட்டுப்படைத்தலைவராக நியமித்து, இரண்டாம் போர்முனையை ஆரம்பிப்பார்கள் என்று தெரிகிறது.

கந்த:—ஆமாம், பாவம், ரஷியர்கள் எத்தனை நாளைக்குத்தான், இப்படிக் கஷ்டப்படுவது. ரஷியரும் சீனரும் ரொம்பப்பாடுபடுகிறார்கள்,

சுந்தரம்:—சீனர்கள் இப்போ ஜப்பானியர் பிடித்துக்கொண்ட பூச்சோ நகரைச்சுற்றி வளைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஜப்பானியரிடம் பிடிபட்ட எத்தனையோ நகரங்களை மீட்டுவருகிறார்கள். அவர்களின் நகரங்கள் நாசமாயின, வயல்கள் மேடுகளாயின, மக்கள் மாண்டனர், ஆனால் மனஉறுதிமட்டும் தளரவில்லை.

கந்த:—நம்ம ஊர்மேலே பாய்மாட்டானே இந்த ஜப்பான்காரன்?

சுந்த:—தீர்மானமாகச் சொல்லமுடியுமா? இந்தியாவை அபகரிக்க வேண்டுமென்பது ஜப்பான் திட்டத்திலே ஒரு பாகம். சீனா சண்டை தீரவில்லை. இங்கு, படைபலமும் திரண்டுவிட்டது. காலைவைத்துவிட்டால், உளையிலே இறங்கியமாதிரி ஆகிவிடுமோ என்று யோசிக்கிறான் ஜப்பானியன். அவனிடம் பிடிபட்ட பர்மாவிலே, பிரிட்டிஷ், அமெரிக்க விமானங்கள், அக்யாப் முதலிய தளங்களைத் தாக்கிக்கொண்டே இருக்கின்றன. ஆஸ்திரேலியாப்பக்கம் திரும்பினால், அங்கேயும் முஸ்தீப்பு பலமாக இருக்கு, இங்கே திரும்பினாலும், படைபலம் திரண்டுஇருக்கிறது. எனவே, என்ன செய்வதென்று யோசிக்கிறான்.

சீனு:—ரஷியாவைத்தாக்க ஜப்பான் பிளான் போடுகிறதாமே. மன்சூரியா பக்கமாக ஏராளமான துருப்புகளைக் குவித்திருக்கிறதாமே?

சுந்த:—ஆமாம்! ஆனால், ஏராளமான ரஷியத் துருப்புகளும், அங்கே ரெடியாக இருக்கிறது தெரியுமோ.

கந்த:—பரவாயில்லை, நம்ம காந்தி சமாசாரம் எப்படி இருக்கு?

சுந்த:—அதைப்பற்றி ஐயரைக்கேளுங்கோ.

சீனு:—அது என்ன சுந்தரம், உனக்குத்தெரியாதோ!

சுந்த:—தெரியும், ஆனால் சொன்னால் உங்களுக்குக் கோபம்வரும், வம்பு வளரும்.

கந்த:— அப்போ, அந்தப்பேச்சு வேண்டாமப்பா. உலகவிஷயத்தோடே நிறுத்துவோம். நான் போய் வருகிறேன்.

## நேசர் ஒற்றுமைக் கழகம்.

### சின்னக் காஞ்சிபுரம்

2-8-42 ஞாயிற்றுக்கிழமை மாலை 5-மணிக்கு ஷை கழகத்தின் தலைவராகிய தோழர் C. S. ஜகநாதத்தின் திருமணத்தை முன்னிட்டு ஓர்தேனீர்விருந்துப் பாராட்டக்கூட்டம் தோழர் T. P. S. பொன்னப்பனார் தலைமையில் நடைபெற்றது. மாணவர்கள் உட்பட பலர்வந்திருந்து கூட்டத்தைச் சிறப்பித்தனர். ஷை கழக உறுப்பினர்களால் ஓர் வாழ்த்துத்தாள் மணமகனுக்கு வாசித்தளிக்கப்பட்டது. தோழர்கள் ஈழத்து அடிகள், பார்த்தசாரதி, கணேசன், A. சுப்பிரமணியம், C. இராசாபாதர், பாலகிருஷ்ணன் முதலியோர் கழக முன்னேற்றத்தைப் பற்றிச் சொற்பொழி வாற்றினர். தோழர் C. S. சுந்தரேசன் தமிழ்ப் பாட்டுப் பாடினார். தலைவரின் விரிவான சொற்பொழிவுடன், காரியதரிசி G. இரங்கநாதன் வந்தனம் கூற கூட்டம் இரவு 8-மணிக்கு இனிது கலைந்தது.

### அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

மேற்படி பல்கலைக் கழக, மாணவர் கழகத்தில், காந்தியாரின் புதுப்போர்த்திட்டம் அவசியமானதுதான் என்ற தீர்மானம் விவாதிக்கப்பட்டது. தீர்மானம் பெருவாரியான ஓட்டுகளால் தோற்கடிக்கப்பட்டது.

## வார்தா முனிவர் யாகம்!

2ம் பக்கத் தொடர்ச்சி

இருப்பது உண்மையிலே நாட்டுவிடுதலைஎன்னும் நோக்கமல்ல, நயவஞ்சகம் குடிகொண்ட உள்ளமே அத்தன்மையோருடையது.

சுதந்தரம் சுந்தரமான கருத்துள்ளது! அதை பெற்றுத்தான் தீரவேண்டும் அதிலே சந்தேகமில்லை. ஆனால் இப்போதுள்ள காலநிலை, சுதந்திரத்தைச் சுவஸ்திக்கொடியோன் சூறைபாடும் நேரம்! ஜப்பானியர் அழிக்கும் காலம், வீரப்பிரான்சும், வெஞ்சமர் புரியும் வல்லமை கொண்ட பெல்ஜியமும், நாடிநடுங்கா நார்வேயும், பிறவும் தமது சுதந்திரத்தை இழந்ததைக் கண்டு, உலகம் பதைக்கும்நேரம். ஏராளமான படைபலம் கப்பற்கூட்டபலம், விமானபலம், இவ்வளவுடன் மக்களின் மன அரண்எனும் பலம்பெற்று தயாராகவும், கஷ்டநஷ்டமேற்கும் திறனுடனும் உள்நாட்டிலே ஒற்றுமையுடனும் இருந்தாலன்றி, சுதந்திரம் அரைமணிநேரமும் நிலைத்திருக்க முடியாதென்பதைக் கடந்த இரண்டாண்டுச் சம்பவங்கள் நிரூபித்துக் காட்டிவிட்டன. இந்நிலையிலே சுதந்திரம் கேட்பவர் ஒன்று இன்றைய உலகிலே அதன் நிலையாது? என்பதை அறியாதவராக இருக்கவேண்டும், இல்லையேல் அறிந்தும், எதிரியிடம் கைக்கூலிபெற்று நாட்டைக் காட்டிக் கொடுக்கத் துணிந்தோராக இருத்தல் வேண்டும்.

போர் துவங்கினதும் காந்தியார் இந்தச்சமயத்திலே, சர்க்காருடன் பேரம்பேசக்கூடாது, அது இழிதன்மையாகும் என்று கூறியதையும், நேசநாடுகள் தோற்று இந்தியாவுக்குச் சுயராச்யம் கிடைத்துப்பயனில்லை என்றும், லண்டன் மீது குண்டு பொழிந்தால் தனது கண்ணாளிலே நீர் வழியுமென்றும் கூறியதுடன் இந்த யுத்தத்திலே இந்தியா கலந்து கொள்வதானால், இன்ன தேதிக்குள் சுயராச்யம் தந்துவிடுகிறேன் என்று பிரிட்டன் வாக்குத்தரவேண்டும், அதற்கான இறுதி எச்சரிக்கையை, காங்கிரஸ், பிரிட்டனுக்கு விடல் வேண்டும் என்று சுபாஷ் சந்திர போஸ் கூறினபோது அதைக்குறை கூறினதும், பின்னர், யுத்தத்தை எதிர்த்துப் பேச, பேச்சுச் சுதந்திரம் வேண்டும் என்று கேட்டதும், அதைப்பெற, தனிப் பட்டவர்கள் சத்யாக்கிரகம் துவக்கியதும், அதிலே மந்திரிப்பிரதானுதியர் சிறை சென்றும், பட்டாளத்துக்கு ஆள் சேருவதோ, யுத்தநிதிக்குப் பணம் குவிவதோ ஒரு துளியும் பாதிக்கப்படாததையும், ஒரு முறை சிறை சென்றவர்கள், மீண்டும் போகமறுத்ததையும் கண்டு, சத்யாக்கிரகத்தை நிறுத்திக் கொண்டதையும், நன்கு தெரிந்து கொண்டுள்ளவர்கள், ஒரே வாரத்திலே போர், விறுவிறுப்பானபோர், உக்கிரமான போர், உலகமேகண்டு அதிசயிக்கத்தக்க போர் என்றெல்லாம் விளம்பரப்படுத்தப்படும் இந்தப்போர், புறப்படும் போது வேகமாகவும், போகையிலேயே வழிதவறியும், இடையிலே இடுப்பு முறிக்கப்பட்டும், சடுதியிலே சாயும் என்பதையும் நன்கு அறிவர். எட்டு மாகாணங்களை ஆண்ட பேர்வழிகள், காந்தியாரின் இடக்கரம் வலக்கரம்' சங்கு சக்கரம், கதை தண்டம் என்ற அடைமொழிகளுக்கு இலக்காக இருந்தவர்கள் சிறை புகுந்தபோதே, பத்திரிகைச் சலசலப்பன்றி பிறிதொன்று மில்லாது, பலிக்காது போய் விட்டதே. இம் முறைமட்டும் இடம் பொருள் ஏவல் தெரியாத கூட்டம் துவக்கப்போவதாகக் கூறும் இந்தப்போர், என்னபலனைத்தரப் போகிறது? முன்பு நடந்ததற்கும் இப்போது நடப்பதற்கும் ஒரு வித்தியாசம் காட்டலாம் என்று காங்கிரஸ் வட்டாரம் கருதுகிறது. அதாவது, ஆங்காங்கு வகுப்புக்கலகத்தை மூட்டி விடலாம் என்று கருதுகிறது. இது என்ன பலன்தரும்? வகுப்புக் கலகத்துக்கு ஆஸ்பதமானகாரணங்கள் இங்கு மலிந்து கிடப்பதை உலகுக்கு எடுத்துக்காட்டுமே யொழிய, நாடு சுயராச்யத்துக்கு இலாயக்காக இருப்பதையா காட்டும்! ஏனோ இந்தக் கெடுமதியும் மடைச்சதியும்?.

பிரிட்டிஷாரை வெளியே போகச்சொல்லி விடுகிறீரே, ஜப்பானியப் பேராபத்துக்கு என்ன செய்வீர்? என்ற கேள்விக்கு, "ஏதாவது செய்கிறோம்! ஒத்துழையாமையைச் செய்வோம்" என்று பதில் உரைக்கிறார்கள். என்னே பேதைமை! நம்மை ஒத்துழைக்கும்படி, ஜப்பான் கேட்டால்தானே, நாங்கள் ஒத்துழைக்க முடியாது என்று முடுக்காக இருக்க முடியும்! ஒத்துழைக்கும்படி, பிரிட்டிஷார் மட்டுமே கேட்பர்! ஆட்சியிலே பங்கும், அதிகாரத்திலே இடமும் தருவர், வட்ட மேஜை கூட்டினர் பிரிட்டிஷார், பிற நாட்டார், ஈட்டி முனையால் குத்துவர், உங்கள் நாடுதான், ஆனால் உங்களுக்குள் ஒற்றுமை பிறந்தால், ஆட்சியைத்தர அட்டியில்லை என்றுரைக்கின்றனர் பிரிட்டிஷார். பிறரோ, எமது வாள் வலியால் பெற்றோம், வாயைத் திறவாதீர், வாள் வலி யிருந்தால், கிளப்புங்கள் பார்ப்போம் என்றே கூறுவர். இதுவரை, எத்தனை முறை, எத்தனை ஆயிரம் பேர்கள், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஒழிக என்று கூவியிருக்கிறார்கள், எவ்வளவு வன்மையான கண்டனங்கள், எவ்வளவு ஏளனமான பேச்சு, இவ்வளவுக்கும் இடந்தந்த பிரிட்டிஷ் இயல்பு போல, இனி வேறெந்த இயல்பும் இராது. ஒரு சமதர்ம பாட்லிவாலாவின் சொற்பொழிவைக்கேட்டுச் சகிக்காத ஆச்சாரியார், பாட்லிவாலாவைச் சிறையிலிடக் காணவில்லையா? சீராளா சித்த வலசாவில் தொழிலாளர் கிளர்ச்சி செய்தபோது துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டதைக் காணவில்லையா? மதுரையிலே தொழிலாளர் மண்டை உடையத்தடியடி நடந்ததையும், தொழிலாளர் தலைவர்கள் சிறையிலே தள்ளப்பட்டதையும் கண்டோம், ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழர் மொழிப்போருக்காகச் சிறையிலே தள்ளப்பட்டதைப் பார்த்தோம். இவ்வளவும் சாம்பிள் சுயராச்யத்திலே, பார்த்தோம்! இத்தகைய ஆட்சி நடத்தியவர்களிடம், பிரிட்டிஷாருக்கு இருப்பது போன்ற ஆட்சியும் அதிகாரமும், படை பலமும் இருந்திருக்குமானால், எழுதும் நானும், படிக்கும் நீங்களும், என்ன பாடு படவேண்டுமோ தெரியாது. இத்தகைய பேர்வழிகள், இன்று வெள்ளையரை விரட்டுகிறோம் என்று கூறும் வேடத்தை அணிந்துள்ளது, வேறு எதற்குமல்ல, வெள்ளையர் நமது இனத்தின் உரிமைகளையும், இஸ்லாமியரின் இலட்சியத்தையும் சற்று மதித்து, ஓரளவு ஆதரிக்கத் தொடங்கி விட்டார்களே என்ற காய்ச்சலும் கடுப்புமேதான், இதைத் தோழர்களே உணருங்கள்.

*       *       *       *       *       *

"சுயராச்யமா வேண்டும்? எங்கள் நாட்டுக்கிளைவ், பிளாசி யுத்தத்திலே, உங்கள் நாட்டவரைத் தோற்கடித்து இந்நாட்டைப் பிடித்தார். மற்றோர் பிளாசியிலே, எங்கள் படைகளைத் தோற்கடித்து உங்கள் நாட்டை மீட்டுக் கொள்ளுங்கள்" என்று ஒரு வார்த்தை, பிரிட்டிஷ் சர்க்கார் சொன்னால், என்ன செய்வார்கள் காங்கிரசார்? காந்தியார் என்ன செய்வார்? ஓடோடி வார்தா சென்று அந்தராத்மாவை அழைத்து, வரம் பெற்று, சர்வ சித்தியாகம் செய்வாரா? அந்த யாகத்தின் பயனாக, நாற்பது கோடி மக்களைக்காக்க முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும், கின்னரர், கிம்புருடர், சித்த வித்தியாதரர்கள், ஓடோடி வந்து நின்று, ஓங்காரச் சத்தமிட்டுப் போர் புரிவார்களா? தக்ளிகள் துப்பாக்கிகளாகி, சர்க்காக்கள் சப்மெரின்களாகி விடுமா? கதர் துப்பட்டிகள் பலூன் பாரேஜ் (பலூன் அரண்) ஆகிவிடுமா! வீடுகளிலுள்ள குழவிக்கற்கள் உலக்கைகள் முதலியன, பீரங்கிகளாகி விடுமா! என்னப்பா நடக்கும் தேசியத் தோழா, கூறு கேட்போம், ஏதோ, ஜனநாயகம், தேசீயம், மனிதாபி

(5ம் பக்கம் பார்க்க)

## ஏஜண்டுகள் தேவை,

கீழ்க்கண்ட இடங்களில் நமது பட்டு களுக்கு ஏஜென்ஸியை எடுத்து நடத்தத்திற மையுள்ள ஜில்லா ஏஜெண்டுகள் தேவை. ஜில்லா முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்து, சாம்பிள் காட்டி ஆர்டர் புக் செய்யவேண்டும்.

வாக்குச்சாதுர்யமாகப் பேசுவோரும், நல்ல உழைப்பாளியாயுள்ளோரும், மாதம் ரூ. 150- முதல் ரூ. 500 வரை கண்டிப்பாக சம்பாதிக்கலாம். தகுந்த டிபாசிட் கட்டக்கூடியவர்கள் எழுதவும்.

### ஜில்லாக்கள்.

| | |
|---|---|
| 1. திருநெல்வேலி. | 7. வடஆற்காடு |
| 2. மதுரை | 8 செங்கற்பட்டு |
| 3. திருச்சிராப்பள்ளி | 9. கோயம்புத்தூர் |
| 4. தஞ்சாவூர் | 10 நீலகிரி |
| 5. இராமநாதபுரம் | 11. சேலம் |
| 6. தென்னாற்காடு | 12. சித்தூர். |

கே. எஸ். முத்தையா கம்பெனி,
சில்க் அவுஸ் காசி. (ஸ்தாபித்தது 1909.)

## பாகிஸ்தான் போர்

[ஆசிரியர் P. K பாபு சாஹிப்]

பாகிஸ்தான் பிரச்சனைபற்றிய விளக்கமும், எதிர்ப்புகளின் போலித்தன விவரமும், தீட்டப்பட்ட புத்தகம்.

இனிய. எளிய நடையில் பாகிஸ்தான் தத்துவமும், பாகிஸ்தானின் அவசியமும் விளக்கமாகக் கூறபட்டிருக்கிறது

இஸ்லாமியரும், தமிழரும், இதனைப்படித்து, எதிரிகளின் கேள்விகளுக்குத்தக்க விடைகூறலாம்

சரிதச்சான்றுகளும்சான்றோர் மொழிகளும் நிறம்பியது.

கோவைஜில்லா முஸ்லீம் லீக் ஆர்கனைசர், ஜனுப் P. K. பாபுசாஹிப் இயற்றியது.

பக்கங்கள் 66. -:- விலை அணு 6.

கிடைக்கு மிடம்:—

K. M. ஹனீப்,
13/29 தேவேந்திர லேன் V. H. ரோடு,
கோயம்புத்தூர்


மயில் டான்ஸ்

## T. K. S. சகோதரர்களின் நாடகவிழா!

## "கரூரில்"

## இணையற்ற 2வது வாரம்!

'கரூர்' ஸ்ரீகிருஷ்ணவிநோத விலாச
தியேட்டரில்,

"மேனகா" "குமஸ்தாவின் பெண்" முதலிய படங்களில் நடித்துப் புகழ்பெற்ற "முத்தமிழ்க் கலாவித்வரத்ந"
T. K. S. சகோதரர்களின்,
மதுரை
ஸ்ரீபால ஷண்முகானந்த சபையாரால்

மதுரையில் '108' நாட்கள் நடத்தி வெற்றிக்கொடி நாட்டிய

# 'சிவலீலா'

—(உரிமை பெற்றது)—

9—8—42 ஞாயிறு முதல் பிரதிதினமும் நடைபெறுகிறது.
(இரவு 9-30 மணிக்கு) T. K. S. Brother's
'சிவலீலா' கதைப் புத்தகம் 0—8—0 வேண்டுவோர் எழுதவும். Propriotor's.


Printed at the United Printing Works, Hodgsonpet Conjeeveram.
and Published by C. N. Annadurai, M. A. at 51, Nimanthakara Street, L. Conjeeveram.